தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VII. } ருதிரோத்காரி௵ ஐப்பசி௴ {பகுதி 7

Bridges

பாலங்கள்

ஸ்ரீமான் K. சுப்பிரமணிய ஐயர், B. E. எழுதியது.

(VII-ம் தொகுதி, 105-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

III

அபூர்வப்பால வகைகளில் மூன்றுவது பகுதியாகிய ஆழங்காற் பாலத்தின் மர்மத்தை விசாரிக்குமுன் இதனருகிலுள்ள 19-வது படத்தைக் கவனிப்போம். ஒரு நதியின் கரைகளில் ஒன்றுக்கொன்று எதிராய் இரண்டு மரக்கிளைகளிருக்கின்றன. அவற்றிலிருந்து எதிரெதிராய் இரண்டு பெரிய கிளைகள் படுகைக்குள் நீட்டிக் கொண்டிருக்கின்றன. ஒரு மரத்திலுள்ள குரங்கு எதிர்க்கரை மரத்தின் குரங்கினிடம் விளையாடப் போகவேண்டும். சற்றுயோசித்துப்பின் அதுஒரு கொடியைப் பறித்து வீசுகிறது. எதிர்க் கரைக் குரங்கு எறிந்த கொடியைப் பற்றிக்கொள்கிறது. இரண்டும் சேர்ந்து நீட்டிக் கொண்டிருக்கும் கிளைகளில் கொடியை கட்டிவிடு

கின்றன. கொடி மேலேறி எதிர்க் கரைக்குப் போகின்றன. கொஞ்சகாலம் கழித்துக் குரங்குக் கூட்டங்கள் சபை கூடிப் பேசிக் கொடிக்குப் பதிலாக ஒரு ஒடிந்த கிளையை நீட்டிக் கொண்டிருக்கும் கிளைகளுக் கிடையில் வைத்து அவற்றுடன் கட்டி அதன்மேல் சாவதானமாய்க் குதித்துப் போகின்றன. இக்குரங்குகள் அமைத்த பாலத்துக்குப் பெயர் ஆழுங்கால் பாலம்.

ஆழுங்காற் பாலங்களி லெல்லாம் திண்டுகளிலிருந்து இரண்டு கிளைகள் கண்வாய்க்குள் நீட்டிக் கொண்டிருக்கும். இக்கிளைகள் சுவரில் பதிக்கப்பட்ட ஆழுங்கால்போல் திண்டில் பதிக்கப்பட்டோ அல்லது வேறு விதமாயோ தன்னுதாரமாய் நிற்பதனால் இப்பாலத்துக்கு ஆழுங்காற் பாலமென்றும் கிளைகளுக்கு ஆழுங்கால்களென்றும் பெயர். கிளைகளுக் கிடையிலுள்ள வெளி சுருக்கமாயிருப்பதால் அக்கண்வாய்க்கு மட்டும் குரங்குகள் வைத்த கட்டைபோல் ஒரு சாதாரண கட்டையாவது சட்டத்தையாவது வைத்துவிடுவது வழக்கம்.

ஆழுங்காலில் வரும் விசைகள் உத்திரத்தில் வரும் விசைகளைப் போன்றில்லை. படத்திலுள்ள ஆழுங்கால் பாலத்தி னடியில் வளையும் விதத்தைப் பார்த்தால் அதன் மேல் விளிம்பில் இழுவிசையும் கீழ் விளிம்பில் இறுக்கு விசையும் வருவது தெரியும் (படம் 20) உத்திரத்தின்மேல் விளிம்பில் இறுக்கு விசையும் கீழ் விளிம்பில் இழு விசையும் வருமென்று முன்னே (தொகுதி V: பக்கம் 261ல்) காட்டப்பட்டது. ஆழுங்காலின் தன்மையையும் அதில் உத்திரத்துக்குச் சொன்னதுபோல் ஈரக் களிமண்ணால் செய்து கண்டு கொள்ளலாம். வெட்டுவிசைமட்டும் உத்திரத்தைப்போலவே திண்டோரத்தில் அதிகமாயிருக்கிறது. இதையெல்லாம் ஞா


21. NIAGARA BRIDGE
470'
NIAGARA RIVER
22. SUKKUR BRIDGE.
790'
27. JUBILEE BRIDGE.
RIVER HUGLI.
524'

பக்கத்தில் வைத்துக் கொண்டால் ஆழங்காற் சட்டங்களின் அமைப்பு விசைகளுக்கேற்றபடி இருப்பதை அறியலாம்.

இவ்விதப் பாலங்களில் ஒரு திண்டிலிருந்து இரண்டுபக்கமும் ஒருமாதிரியான ஆழங்காற் கிளைகள் நீட்டிக்கொண்டிருக்கும். அவையிரண்டும் ஒன்றின்கனம் மற்றொன்றுக்கு ஈடாக நிற்பதனால் சட்டம் திண்டிலிருந்து சாயாமல் தராசுக்கோல் போலிருக்கும். சட்டத்தின் தன்னுதாரத்துவம் இதனால் கிடைக்கிறது. நதிப்படுகையில் இரண்டு திண்டுகளிருந்தால் மூன்றுகண்வாய்களாகும். நடுக்கண்வாயில் ஆழங்கால்களுக் கிடைவெளியில் ஒரு கர்டர் சட்டத்தைவைப்பார்கள். பக்கக் கண்வாய்களில் நீட்டிக்கொண்டிருக்கும் ஆழங்கால்களின் நுனிகளை எதிர்க்கரையில் சேர்த்துக்கட்டி விடுவார்கள். இதை நயாகரா ஆழங்காற்பாலத்தில் பார்க்கலாம் (படம்-21). திண்டுகளைக் கரையிலேயே கட்டியிருந்தால் ஆழங்காலைத் தன்னுதாரமாய் நிறுத்துவதற்கு அவற்றை பூமியுடன்சேர்த்து நங்கூரம் போட்டாற்போல் கட்டவேண்டியிருக்கிறது. இது இந்தியாவில் விந்துநதியைக்கடக்கும் சுக்கூர் பாலத்தின் (Sukkur Bridge) அமைப்பில் காணப்படும் (படம்-22) நதிமத்தியில் ஒரே திண்டின்மேல் இரண்டுபக்கமும் நீட்டிக்கொண்டிருக்கும் ஆழங்காலை வைத்துக் கரைக்கும் ஆழங்காலுக்கும் இடையிலுள்ள வெளியில் கர்டராவது கர்டர் சட்டமாவது வைப்பதும் உண்டு. ஆழங்காலை ஒருதிண்டின் மேல் தாங்குவதற்குப் பதிலாக இரண்டு திண்டிகளின்மேல் தாங்கித் திண்டுகளுக்கும் அப்பால் நீட்டிவிடுவதும் உண்டு. [ஜுபிலிப்பாலம் (Jubilee Bridge) (படம்-27) மெம்பிஸ்பாலம் (Memphis Bridge) (படம்-26)] ஆழங்காற் சட்டங்கள் அதிகவெட்டுவிசையைத் தாங்குவதற்காகத் திண்டோரமாய் அதிக உயரமாயும் பலமாயும்செய்யப்படுகின்றன. உயரத்தைப் பாதைக்குமேலாகவோ,

கீழாகவோ, அல்லது மேலும் கீழுமாகவோ, அதிகப்படுத்து வார்கள்.

தொடர் கர்டருக்கும் ஆழங்கால் பாலத்துக்கும் அனேக விஷயங்களில் ஒற்றுமை உண்டு. விசைகளில் ஒத்திருக்கின் றன. இரண்டிலும் பலமும் கனமும் மிகுந்த பாகம் திண்டின் மேலேயே உட்காருகிறது. தொடர் முறை கர்டர் வளையும் விதம் பெரிதாய்ப் படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. (படம் 23). அதில் வளைவுமாறும் ஸ்தானம் (Point of inflection) பாரத்தின் இடத்துக்குத் தக்கபடி மாறும். ஆழங்காற் பாலத் தின் வளைவுபடத்திலிருந்து (படம்-24) அதில் வளைவுமாறும் ஸ்தானம் ஒரே இடமாய்த் தானிருக்கவேண்டும் என்று புலப் படும். ஏனென்றால் அதில் ஆழங்காலின் வளைவு பூமியை நோக்கி உட்குழிந்திருக்கிறது. நடுவிலுள்ள தனிகர்டரின் வளைவு ஆகாசத்தை நோக்கி உட் குழிந்திருக்கிறது. தனி கர்டரும் ஆழங்காலும் சேரும் இடத்தில்தான் வளைவுமாறும். அவைசேருமிடம் எப்போதும் ஒன்றுதான்.

திண்டுகளின் மேல் ஆழங்காற் சட்டங்களைச் சேர்க்கும் போது இரண்டுகிளைகளையும் ஒரே கதியாய்க் கூட்டிக் கொண்டுபோனால் ஒன்றை யொன்று தாங்கிக் கொள்ளும். சாரம் அவசியமில்லை. இப்படிக் கட்டும் விதத்தை போர்த்துப் பாலத்தின் (Forth Bridge) படத்தில் பார்க்கலாம்(படம்-25). சுக்கூர் பாலத்தில் நீட்டிக் கொண்டிருக்கும் கிளையைக் கட்டும் போதே கயிறுகளால் இழுத்துப் பிடித்தார்கள்.

அகன்ற கண் வாய்களுக்கு ஆழங்காற் பாலம் ஏற்றது. மிஸிஸிபி நதியைக் (Mississipi) கடக்கும் மெம்பிஸ் பாலத் தின் கண் வாய்களுள் ஒன்று 790-அடி அகல மிருக்கிறது. அதில் இரண்டு கம்பங்களில் தாங்கப்படும் ஆழங்கால்கள் இருக்கின்றன. (படம்-26) சுக்கூர் பாலம் ஒரே அகன்ற கண்



25. போர்த்துப் பாலமும்
அதைக் கட்டின விதமும் -(A.B.C.D)
FORTH BRIDGE

வாய் உள்ளது. சட்டம் கண்வாயில் ஐந்தில் ஒருபங்கு உயரம் உள்ளது. உறுப்புகள் மிகப் பெரியவை. கண் வாயின் அகலம் 790-அடி (படம்-22) ஆழுங்காற் கிளைக ளொவ்வொன்றும் 310-அடி நீளம். நடுக் கர்டர் 200-அடிநீளம். இதற்குச் செலவு அதிகமாயிற்றும்.

பிரசித்தி பெற்ற போர்த்துப்பாலம் (Forth Bridge 1710-அடி யகலமான இரண்டு கண் வாய்கள் உள்ளது. அது பர்த் அப் போர்த், (Firth of Forth) என்ற ஸ்காட்லண்டில் உள்ள ஜலப்பிர தேசத்தைக் கடக்கிறது. அதில் கரையிலிரண்டும் நடுவில் ஒன்றுமாக மூன்றுதிண்டுகளின் மேல் கட்டப்பட்ட ஆழுங்கால்கள் இருக்கின்றன. பால மத்தியின்



26. MEMPHIS BRIDGE- மெம்பிஸ் பாலம், மிஸிஸிபி நதி.

அடிப்புறம் வெள்ள ஜலத்துக்கு 150-அடிக்கு மேலே இருக்கிறது. ஒவ்வொரு திண்டும் நான்கு தூண்கள் சேர்ந்தது. ஆழுங்காற் நிலைகளின் நீளம் 680 அடி உயரம் 330 அடி, அகலம் திண்டோரத்தில் 120-அடி. அதி லடிக்கும் காற்றின் விசை 2000 டன் கனம் இருக்குமாம்! ஆழுங்கால்களின் அடிவரை உறுப்புக்கள் 12-அடி யகலமுள்ள உருக்குக் குழாய்களாம்! பாலத்தின் கனத்தில் 200-ல் ஒரு பங்குதான் அதன் மேல் ஓடும். அதைக் கட்டி முடிக்க 7-வருஷம் சென்றது. சுமார் 3000,000 பவுன் செலவாயிற்று. நியூயார்க்கிலும் பெரிய தொரு ஆழுங்காற்பால மிருக்கிறது. ஆயிலும் போர்த்துப்பாலத்தின் கியாதிக்கு இணையாய் வேறொன்றுக்கும் இல்லை.

(தொடரும்)

ஸ்வாமி தயானந்த சரஸ்வதி.

Swami Dayanand Saraswati

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

(தொடர்ச்சி)

"மகா சாத்வீகர்களாய், பிரஹ்ம ஞானிகளாய், "சர்வ லோகங்களும் சுகமடையட்டும்" என்ற ஓரேவாழ்த்துதலையுடையவர்களாய், உலகத்தவர் எல்லோரும் பிர்ஹ்ம பதத்தைத் தங்களைப் போலவே யடைந்து ஆனந்திக்கும் பொருட்டு அவர்களுக்கு ஹிதோபதேசஞ் செய்வதே கங்கணமாகக் கொண்ட ஜீவகாருண்ய சொரூபிகளாய்ச் சதா பிர்ஹ்ம நிஷ்டர்களாய்ப் பிரகாசிப்பவரே பிராம்மணர்கள். மகா பலிஷ்டர்களாய், யுத்தப்பிரியர்களாய், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தையே கைமேற்கொண்டவர்களாய், சுதந்தரத்தை நிலைநிறுத்துபவர்களாய், நியாய வநியாயங்களை விசாரித்துச் செங்கோல் புரிபவர்களே க்ஷத்திரியர்கள். கைத்தொழில்-வியாபாரங்களைக் கைக்கொண்டு, நிராசையுடன் சூதுவாது கபடவஞ்சனை களில்லாமல் தனசேகரர் களாயிருப்பவரே வைசியர். மற்றைச் சில்லரைத் தொழிற்களைச செய்பவரும், பிரஹ்ம ஞானிகளுக்கும்-செங்கோலரசர்க்கும்-பசுபரிபாலன வியாபாரிகட்கும் வேண்டும் உதவிகளைச் செய்து அவர்களால் பராமரிக்கப் படுவோரும் சூத்திரரெனப்படுபவர். இவர்களை ரதத்தை உறுதிப்படுத்தும் மிகவுஞ் சிறிய ஆணிபோன்றவர்கள். இவர்களது உதவியினாலேயே உலகம் சீராய் நடைபெறும்."

"பிரஹ்ம ஞானம் லவலேசமுமில்லாமல் மயக்க ஞானமே மும்முரமாய், பகிர்முக விஷயங்களில் மிகவும் அதிநுட்பமான தத்வவிசாரமுடையராயிருக்கிறார்கள். தற்காலத்திய பிராம்மணர்கள். இப்போதைய க்ஷத்திரியர்களோ, இப்போதைய வைசியர்களோ தானம்-தருமம்-நிராசை முதலிய

சத்கருமங்களைக் கைவிட்டு விட்டார்கள். இவ்விதமாக நான்கு வருணத்தினரும் ஆசாரஹீனர்களாய் விட்டமையின், நமது ஆரியவர்த்தம் தாழ்வுற்றது."

"எங்ஙனம் ஓர் வீடுகட்டுவதற்குச் செங்கல்-சுண்ணும்பு-மரம், தச்சன், கொல்லன்-கொற்றன் வேண்டுமோ, எங்ஙனம் கை-கால்-கண்-மூக்கு-செவி-மூளை-முதலிய சகல அவயவங்களும் சீராய் அமைந்துள்ள ஒரு சரீரத்தை அழகுள்ளதென்று சொல்லுவோமோ, அங்ஙனமே ஒரு ஜனசமுதாயத்தைக்கட்டுவதற்குப் பிராமணன் முதல் பறையன் வரைச் சாலரும் வேண்டும்; சகல தொழிலாளிகளும் சீராய் நிறைந்த ஒரு ஜனசமுதாயத்தை ஆரோக்கியமான தென்றும் அலங்காரமான தென்றும் சொல்லலாம் சரீரத்தின் அமைப்பிற்கும் லக்ஷணத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் ஒவ்வோர் அவயவமும் இன்றியமையாததுபோல், ஒரு ஜன சமுதாயத்தில் அதன் பற்பல அவயவங்களாகிய பற்பல ஜாதிகளும் அவ்வவற்றின் தொழிற்களை முறையே செய்தல் சிரேஷ்டமானது. காலில் முள் தைத்தால் இருகண்களினின்றும் கண்ணீர் பெருகுகின்றது; இரண்டுகைகளும் அம்முள்ளைப்பிடுங்குவதில்வேலைசெய்கின்றன; மூளையும் அதற்கான உபாயங்களைத் தேடித் துருவிப்பார்க்கின்றது: இதுபோலவே, ஜனசமுதாய சரீரத்தில் ஒரு ஜாதியாருக்குத் துன்பம் நேரிட்டால், ஏனைய அவயவங்களாகிய சகல ஜாதியாரும் வருத்தமுற்று அத்துன்பத்தை நிவர்த்திக்கப் பிரயத்னஞ் செய்தல்வேண்டும். காலில் துர்நீர் தங்கி வீங்கியிருக்கும்பொழுது, காலிற்றானே வியாதியென்று சிகிச்சை செய்யாமல் எங்ஙனம் சும்மாயிருந்துவிட்டால் அவ்வியாதியானது வரவரச் சரீரமெங்கும் பரவி மரணத்தைத் தருமோ, அங்ஙனமே, நாவித ஜாதியாருக்கு ஒரு கெடுதி நேரிட்ட காலத்தில், நாவிதருக்குத் தானே கெடுதி யென்று

அதை நிவர்த்திக்காமல் சும்மாயிருந்துவிட்டால், அக்கெடுதி ஜன சமுதாயம் முழுதும் பரவி அதை நாசஞ்செய்யும்.”

“ஒவ்வொரு ஜாதியும் அதற்குரிய மதிப்பை உடைத்தாயிருக்கின்றது. சில ஜாதியாரைத் தாழ்ந்தவர்களென்று கவனியாமலும்; வெறுத்தும் இருந்ததினுற்ருன், அவர்கள் தங்கள் புராதனக் கொள்கைகளைக் கைவிட்டு, நவீன வித்தியாப்பியாச நாகரீகத்தினுலோ, அல்லது அந்நிய மதப்பிரவேசத்தாலோ அவர்கள் உயர்வடைய இச்சிக்கவே, நமது நாடு கீழடைந்தது. தாழ்ந்தவனென்று கருதப் படுபவன் உயர்வையடைய இச்சித்து முயற்சி செய்வான் என்பது பிரபஞ்ச இயற்கையே: இது நியாயமே. குணங்களை அநுசரித்தும், கர்மங்களை அநுசரித்தும் ஜாதி பிரிவுபட்டது என்றதைக் கிஞ்சிற்றேனும் நெஞ்சிற் பற்றுமல் பிறப்பினுல் ஜாதியை ஸ்தாபிக்கும் பேதைகளால் நன்னுடாகிய இந்நாடு கெட்டு அழிந்தது ”

“இளமணத்தினின்றும், கல்வியில்லாமையினின்றும் உண்டாகும் தீமைகளை அறியாதவரில்லை. நூற்றுக்கணக்கான அமங்கிலிகளும், தேகபுஷ்டியும் மனோவலிமையு மில்லாத ஆயிரக்கணக்கான பிள்ளைகளும், கொடியவறுமையும், பிணிகளுமே அவற்றின்பலன்கள்.”

“விதவைகள் மீண்டும் விவாகஞ்செய்து கொள்ளலாம்; விக்கிரஹாராதனையை முற்றிலும் ஒழிக்கவேண்டும்; வீண் சிரார்தாதிகளை நிறுத்திவிடவேண்டும், என்ற கொள்கைகளுக்குச் சிலர் ஆக்ஷேபிக்கலாம் ஆனுல், முதலிற்கூறிய மூன்று விஷயங்களையும் கவனித்து அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்பதை எவரும் நிராகரிக்கமுடியாது.”

Tamil Classics.
தமிழ்ச் செல்வம்.

பரிசில் வேண்டுதல்

வாழு நாளோடு, யாண்டுபல உண்மையில்,
' தீர்தல் செல்லாது என் உயிர் ' எனப் பலப்புலந்து,
கோல் காலாக, குறும் பல ஒதுங்கி,
நூல் விரித்தன்ன கதுப்பினள், கண் துயின்று;
முன்றில் போகா முதிர்வினள் யாயும் ;
பசந்தமேனியொடு படர்பட வருந்தி,
மருங்கில் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள், பெரிது அழிந்து,
குப்பைக்கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்து கொண்டு, உப்பு இன்று
நீர் உலையாக எற்றி, மோர் இன்று,
அவிழ்ப்பதம் மறந்து, பாசு அடகு மிசைந்து,
மாசொடு குறைந்த உடுக்கையள், அறம்பழியக்
துவ்வாள் ஆகிய என் வெய்யோளும் ;
என்றாங்கு, இருவர் நெஞ்சமும் உவப்ப ; கானவர்
கரிபுனம் மயக்கிய அகன்கண் கொல்லை
ஐவனம் வித்தி, மையுறக்கவினி,
ஈனல் செல்லா ஏனற்கு, இழும் என
கருவிவானம் தலைஇ ஆங்கு,
ஈத்த நின்புகழ் ஏத்தித் தொக்க என்
பசிதினத்திரங்கிய ஒக்கலும் உவப்ப ;
உயர்ந்து ஏந்து மருப்பின் கொல்களிறு பெறினும்,
தவிர்ந்து விடுபரிசில் கொள்ளலேன் ; உவந்து, நீ,
இன்புற விடுதியாயின், சிறிது
குன்றியும் கொள்வல்; கூர்வேல் குமண !
அதன்பட அருளல் வேண்டுவல் ; விறல்புகழ்,
வசையில், விழுத்திணைப் பிறந்த
இசைமேம் தோன்றல் ! நிற்பாடியானே.—

புறநானூறு—159

தம் இல்லாமையை விரித்துக் கூறிப், பரிசில் வேண்டி, குமணன் என்னும் அரசனை நோக்கிப், பெருஞ்சித்திரனார் என்ற புலவர் பாடியபாட்டு இது. இதன் பொருள் வருமாறு:—"வயது அதிகம் மூத்து விட்டதனால், 'இன்னும் என் உயிர் போகவில்லையே' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு, தன் வாழ்நாளைப் பலவாக வெறுத்து; கையில் தான் பிடித்த ஊன்று கோலே காலாகக் கொண்டு, அதன் உதவியால் ஒன்றற் கொன்று நெருங்கப்பல அடியிட்டு மெல்ல நடந்தும் கூட, முற்றத்துக்கப்பால் புறப்படமாட்டாதவளும், நூலைவிரித்தால் போன்ற நரைத்த பெண் மயிரையுடையவளும், நன்கு கண் தெரியாதவளுமான என் கிழத்தாயின் மனங்களிக்கவும்: என்னைப் பிரிந்ததனால் மேனிபசந்து, நினைவுவருத்த வருந்தி, ஒக்கலில் எடுசத பல சிறு பிள்ளைகள் பிசைந்து மெல்லுதலால் உலர்ந்த முலையினை உடையளாய், குப்பை மோட்டின்மேல் தானாக முளைத்த குப்பைக்கீரையினது முன்பு கிள்ளப் பட்ட கண்ணிலே கிளைத்த இளந் தளிரைப் பறித்துக்கொண்டு, உப்பு இல்லாமல், வெறும் நீரில் அக்கீரையை வெந்து சோறு என்னும் உணவை 'மறந்து,' அக்கீரையையே தின்று, அழுக்குப்பிடித்துத் துண்டுபட்ட குறை ஆடையை உடுத்து, அறக்கடவுளைப் பழித்து, பட்டினியால் வருந்தும் என் மனைவியின் மனங்களிக்கவும்; வேடர்கள் எரிக்கக்கரிந்த புனத்தை மயங்க உழுது, மலை நெல்லையும் தினையையும் விதைத்த, அப்பயிர் ஓங்கிவளர்ந்து வர, மழையின்றித் தினைப்பயிர் கதிர்விடாது கோடைக்காலத்திலே பெருமழை சொரிந்தார்போலக் கொடையளிக்கும் உன் புகழை வாழ்த்திக்கொண்டு, பசியால் வருந்திக் கூட்டமாய் வந்த என் சுற்றத்தாரின் மனங்களிக்கவும்; நீ மனமுவந்து இன் முகத்துடன் சிறு குன்றிமணி யளவு பொருளெனும் விரைந்து தருவையாயின், நான் மகிழ்ந்து ஒற்றுக் கொள்வேன்; அவ்வாறின்றி, வேணீடா வெறுப்பொடு முகந் திரிந்து மகத்தான பரிசிலைத் தரினும், கூரியவேலையுடைய குமணனே! வென்றிப் புகழையும் உயர்குடிப் பிறப்பையும் இசை மேம் பாட்டையுமுடைய அண்ணலே! நின்னைப் பாடி வந்தயான்" என்பது.

அ. மா.

மதிப்புரை.

Review.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்..............குறள்

சென்னை மேரிராணியார் மாதர் கலாசாலைச் சரித்திர போதகாசிரியராகிய ஸ்ரீமான் அ. வா வெங்கடராம ஐயர், M.A.L.T., அவர்கள் எழுதிய சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம்

(கமெர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை; விலை ரூ 1-0-0)
சளுக்கிய அரசன் ஆறாவது விக்கிரமாதித்தனைப்பற்றி சரித்திரக்காரர் பலவிதக் கொள்கையராய் இருக்கின்றனர்; சோழசிலாசாசனங்களிற் சிலவற்றினின்றும் இவன் கடுங்கோன் மன்னன் எனவும் தமையனைவென்று அரசு கைக்கொண்ட பாதகன் எனவும் கொள்பவர் ஒரு சாரார்; ஆனால் கவிகளிற் சிறந்த பில்ஹணர் இமயமலைச்சாரலினின்றும் இவனது ஆதரிப்புபெற வந்தார் என்பதும் இவரை கதாநாயகராகக் கொண்டு "விக்கிரமாங்கதேவ சரிதம்" என்ற காவியம் புனைந்தார் என்பதும் யாக்ஞ வல்கியஸ்மிருதியின் வியாக்யானமாய் பிரசித்திபெற்ற மிதாக்ஷரம் என்ற அரும்நூலை இயற்றிய விஞ்ஞானேச்சுவர யோகிகள் இவனது புகழைக் கூறியிருக்கின்றனர் என்பதும் இவனை பாபி என்று கொள்வதற்குத் தடைகளாக இருக்கின்றன; ஆகவே, விக்கிரமாதித்தன் உத்தம அரசன் என்று கொள்வதே பொருத்த முடைத்து என்றுகொண்டு எழுதப்பட்ட இந்த சரித்திரம் நன்முயற்சியே யாகும்.

இதில், விக்கிரமாதித்தனது நற்புகழோடு முரண்படுவதாகத் தோன்றும் விஷயங்களையும் ஆதாரங்களையும் பரிசோதித்து, பரிகரிக்கவேண்டியவற்றைப் பரிகரித்து, பட்டயங்கள், சிலாசாசனங்கள், கவிகளில் கூற்று, முதலிய ஆதாரங்களுக்கு அவ்வவற்றிற்குத் தக்கவாறு கௌரவம் கொடுத்து, சரித்திர ஆராய்ச்சிசெய்த டாக்டர்கள் ஹூல்ஷ், பூலர், பண்டார்க்கர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் முதலியோரின் முடிவுகளையும் அவர்கள் கூறும் காரண நியாயங்களையும் தெளிவாக எழுதி,

அவர்கள் கூற்று தமது அபிப்பிராயத்தோடு ஒவ்வாவிடத்து தமது அபிப்பிராயத்தையும் காரணங்களுடன் கூறி ஆராய்ச்சி முறையினின்றும் வழுவாது நடு நிலையுடன் விக்கிரமாதித்தனது சரித்திரத்தை எழுதியிருக்கிறார். விக்கிரமாதித்தன் காலத்தில் தக்ஷிணதேசத்தின் நாகரீகத்தைப்பற்றியும் ஜனங்களின் யோக க்ஷேமத்தைப்பற்றியும் நடையுடை பாவனைகளைப் பற்றியும் சரித்திர ஆராய்ச்சியால் நமக்குத்தெரிய வருவதையெல்லாம் பின்னதிகாரங்களில் நன்கு விளக்குகின்றார் புஸ்தகம் தெளிவாய் விளங்கக்கூடிய நன்னடையில எழுதப்பட்டுள்ளது; ஆங்காங்கு ஆதாரங்களை எடுத்துரைத்தும் எடுத்துரையாவிடத்து ஆதாரங்கள் எங்கு இருப்பவை என்பதைக் குறிகளால் குறித்தும இருப்பது இவரது ஆராய்ச்சியின் நடுநிலையை நன்கறிவிக்கிறது; தக்ஷிணத்தில் புகழ்பெற்ற விக்கிரமாதித்தனதுசரிதத்தை தமிழருக்கு எடுத்துரைத்ததுபோல் அவனுக்குச் சற்றே பின்பட்டவனும் தமிழின் புகழ் பெற்றவனுமான உபயகுலோத்துங்கனை அபயசோழனின் சரிதையையும் இவரே எழுதியச்சிடப்போகிறா என்று இப்புஸ்தகத்திலுள்ள ஒருகுறிப்பால் அறிநது அதின்வரவையும் ஆவலுடன் எதிர்பாாக்கின்றேம். இம்முறையே ஆராய்ச்சிமுறையிலும் அறிவிலும் தேர்ந்து சரித்திர சம்பந்தமான பலநூல்களை இவர் வெளியிடுவாராக.

வே. நா.

தமிழ்

யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கழகத்தின் வெளியீட்டான இம்மாதப் பத்திரிகையில் முதற்தொகுதியின் மூன்று பகுதிகள் வரப் பெற்றேம் பிற மொழிகளின் மூலமாகவே அறிவு நூற்களை கற்கவேண்டும் என்ற அவசியமில்லாமல் தமிழிலேயே அவைகளைக் கற்பதற்கு ஏதுவாய் தமிழை வளம்படுததவேண்டும் என்பதே இப்பத்திரிகையின் முதற்கொள்கை உபயோகப் படக்கூடிய பல விஷயங்கள் இப் பகுதிகளில் நன்கு அமைக்கப பட்டிருககின்றன ; தமிழா தனி மாண்பைப பற்றி திரு. கா. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள M.A.,M.L. எழுதியிருக்கிறார்கள் ; விவேகானந்த சுவாமியாரின் வசனங்களும இரவீந்திர நாத தாக் கூரின் 'கீதாஞ்சலி' யினின்று பாடல்களும் 'Bacon's Essays' வியக்கனர் வகுத்துரைகளும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன ! இவைதவிர வேறு ஆராய்ந்தெழுதப்பட்ட வியாசங்களும் உள. 'மொழிபெயர்

ப்பு முறை' என்ற தலைப்பின் கீழ் திரு. பண்டித மயில்வாகனனார் B. Sc. எழுதியிருக்கும் விஷயங்களும் கவனிக்கத்தக்கவை. மொழி பெயர்ப்போன் கவனிக்கவேண்டிய சில அமிசங்களை வற்புறுத்தி, பிறகு இரசாயன நூலை திருஷ்டாந்தமாகக் கொண்டு அதில் ஆங்கிலத்தில் வழங்கும் பல மொழிகளுக்கு மாற்றாக வழங்கத் தகுந்த தமிழ் மொழிகளைக் காட்டுகின்றார். அவையாவன.

Element தனிப் பொருள்; Mixture கலவைப் பொருள்; Compound கூட்டப் பொருள்; Gold பொன், Lead ஈயம்; Calcium சுண்ணமூலம்; Silver வெள்ளி; Carbon கரி; Phosphorus தீமுறுவல்;முளி;Copper செம்பு; Tin வங்கம்; Sulphur கந்தகம், கிலே; Iron இரும்பு; Zinc நாகம்; Arsenic பாஷாணம்; Mercury ரசம்; Antimony மை; Chlorin நிறம்; Flourine வை; Aluminium தலம்; Barium பாரம்; Helium எல்; Sodium லவம்; Oxygen மதி Nitrogen சடம்.

"ஒவ்வொரு தனிப்பொருளுக்கும் ஒவ்வொரு எழுத்து அறிகுறியாய் நிற்றல் நன்று; ஆதலால் இனி இட்டுக்கொள்ளும் மொழிகள் வேறுவேறு எழுத்துகளை முதனிலையாகக் கொண்டு நிற்றல் நன்று" "அன்றிமணி, வளுஒறின், ஆக்சிஜன், நைத்ராஜன், க்ளோறின் என்று ஆரவார மொழிகளாற் சொல்லின் அவை தமிழுமாகாது ஆங்கிலமுமாகாது." "நீண்ட சொற்களைக் கண்முன்வர வொட்டாது தூரத்த வேண்டும்; ஹிந்தி, வங்காளியாகிய பாஷைகளில் விஞ்ஞானபைரி பாஷை எழுதியவர்கள் நீண்ட சொற்கள் சில வற்றை உபயோகிக்க, அவை வழக்குக்கு வந்தில" என்ற இவை கவனிக்கத் தகுந்தன.

வே. நா.

தொல்காப்பியப் பொதுப்பாயிரம், மூலமும் உரையும்.

இப்போது பாயிர மூலத்துடன் அரிய உரை ஒன்று கிடைக்க, கிடைத்த பிரதி இறவாது காத்தல் வேண்டி, கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் இ. வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் உடன்

ஆராய்ந்து அச்சிட்டு சிறு புஸ்தகமாக வெளியிட்டிருக்கின்றனர். முகவுரையில், பொதுப்பாயிரம் எழுதிய பேராசிரியர் ஆத்திரையர் காலம் ஒட்டக் கூட்டத்தாது காலமும் விக்கிரம குலோத்துங்கன இராசராசன் ஆகிய சோழர்கள் காலமுமாகிய கி பி 1118 க்கும் 1178 க்கும் இடைப்பட்டதாதல் வேண்டும் என்று எடுத்துக்காட்டி; பேராசிரியர் என்ற பெயர் புனைந்தவர் மூவர் இருந்தனர் என்பதற்கும், அவற்றுள் யாப்பருங்கல விருத்திக் குணசாகரனார் கூறும் பேராசிரியர் மயேச்சுரனார் ஒருவர்; குறுந் தொகையில் 380 பாடல்களுக்கும் திருக்கோவையாருக்கும் உரைகண்ட பேராசிரியர் மற்று ஒருவர்; இவ்விருவருமல்லாது, தொல்காப்பியத்திற்கு உரை கண்ட பேராசிரியரே பொதுப்பாயிரம் இயற்றியவர் என்பதற்கும் காரணமும் கண்டிருக்கிறார்; பொதுப்பாயிரத்தில் கூறப்பட்டுள்ள ஆசானது குணங்களையும் மாணாக்கனது குணங்களையும் கற்கும் வழியையும் இவ்வுரை நன்கு விளங்கச் செய்வதால் பாயிரத்துடன் இதைப் பதிப்பித்தது நல்லுதவியே யாகும்.

வே. நா.

தாய்மொழியை வளர்த்தல்.

என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள் எழுதி கும்பகோணத்திற் கடுத்த கல்லூர் கலைமகள் கல்விக் கழகத்தார் வெளியிட்ட இச்சிறு புஸ்தகம் தமிழரால் வாங்கி வாசிக்கத் தகுந்தது. தாய்மொழியின் தொன்மையையும் மேன்மையையும் வற்புறுத்துவதோடு அதை வளர்த்ததற்கு உரியவர் யாவர், எங்ஙனம் வளர்த்தல் வேண்டும், வளர்த்தற்கு மக்கள் செய்யக்கூடிய உதவியாது. புலவர் செய்யக்கூடியது யாது, கழகங்கள் என்னசெய்யவேண்டும், துரைத்தனத்தாரின் கடமை என்னவென்று இவற்றையும் இடித்துக் காட்டி தாய்மொழியை வளம் படுத்துவது கடன் என்பதையும் விளக்குகின்றார்.

வே. நா.

தமிழ் மொழிகள்
Tamil Terms

மனுஷ வங்காதி பாதம்
Human Anatomy

ஸ்ரீ தனெல் வி. சப்மன் என்னும் வைத்தியரால் மொழி பெயர்க்கப்பட்டு, அமெரிக்கா லங்கை மிஷனைச்சேர்ந்த ஸ்ரீசமுல் பி. கிறீன் என்னும் வைத்தியரால் திருத்தப்பட்டு 1872ம் வருஷத்தில், வெளியிடப்பட்ட மனுஷவங்காதிபாதம் என்னும் அரிய நூலின் கடைசியில் காணப்படும் அட்டவணையினின்றும் இம்மொழிகள் எடுக்கப்பட்டனவாகும்.

(120-ம் பக்கம் தொடர்ச்சி)

Nerve efferent-அபிவாக
,, eighth pair - எட்டாஞ் சொட்டு
,, facial - முக
,, fibrous matter of - இழைப்பதார்த்தம்
,, fifth - ஐந்தாம் சொட்டு, மும்முகி
,, fourth - காலாஞ் சொட்டு
,, frontal - நெற்றி
,, ganglion - கிரந்தி
,, ganglionic branch of nasal - கிரந்தி
,, gastric branches of vagus - இரைப்பை
,, gelatinous fibres - செலதினிழைகள்
,, genito - crural - சனனேரு

Nerve glosso - pharyngeal -
,, நாத்தொண்டை
,, gluteal - சகன
,, ,, superior - மேற்சகன
,, gustatory - சுவை
,, of heart - இரிக
,, hemorrhoidal inferior- கீழ்விரேகி
,, hepatic - ஈரல்
,, hypo-glossal - நாக்கீழ்
,, ilio-hypogastric - பாலியுதர
,, ilio-inguinal - பாலிவஞ்சண
,, incisor - ஓரன
,, infra-trochlear - கபிக்கீழ்
,, intercostal - பழுவிடை

Nerve intercosto-humeral - பழுவிடைப்புய
„ internal respiratory of Bell - பெல்லின் உட்சுவாச
„ inter-osseus - என்பிடை
„ of intestines - குடல்
„ ischiadic-ஆசன
„ Jacobson's - யாக்கோப்சர் நரம்பு
„ labial - உதட்டு
„ of labyrinth - பிரமண
„ lachrymal - அசுரு
„ laryngeal - கிருக
„ „ recurrent - கிருகமீளு
„ lingual - நாநரம்பு
„ lumbar - இடுப்பு
„ lumbro-sacral- இடுப்புப்பீடிகை
„ malar - கவுள்
„ masseteric - சருவணி
„ maxillary - தாடை
„ median - மத்திய
„ mental - சம்ப
„ of motion - சலன
„ motor of eye, common-கண்ணுருட்டி
„ „ external - கடாட்ச
„ musculo-cutaneus of arm - கசர்பீறு
„ „ of leg - பேசிச்சரும
„ musculo-spiral - புயசுற்று
„ mylo-hyoid - தனுகுஞ்சி
„ nasal - நாசி
„ naso-palatine - நாசியண்ண
„ nervi-nerverum - நரம்பின் நரம்பு
„ ninth - ஒன்பதாஞ் சொட்டு
„ obturator - குக்தக

Nerve occipital - பிடர்
„ „ great - பிடர்ப்பெரு, மகாகாட
„ „ small - பிடர்ச்சிறு, அற்பகாட
„ oesophageal - இரைக்குழல்
„ olfactory - மோப்பு
„ ophthalmic - நயன
„ optic - பார்வை
„ orbital - குவளை
„ palatine - தாலு
„ palmar - அங்கை
„ palpebral - இமை
„ par vagum - உரோதரி
„ pathetic - கபிநயனி
„ perforans Gasseri கசர்பீறு
„ perineal - விடப
„ peroneal - சர.
„ petrosal - கிராவ
„ pharyngeal - தொண்டை
„ phrenic - விதான
„ plantar - தல
„ pneumogastric - உரோதரி
„ popliteal - மந்திர
„ portio-dura - வன்பங்கு, முசநரம்பு
„ „ mollis - மென்பங்கு, கேள்வி நரம்பு
„ pterygoid - பாதவ
„ prostatic - புரஸ்த
„ pudendal inferior - கீழ்மேசன
„ pudic - மேகன
„ pulmonary from vagus - புப்புச
„ radial - ஆரை
„ recurrent laryngeal - கிருகமீளு
„ renal - பிருக்க

Nerve renal splanchnic - ஆந்திர சிறு
,, respiratory external - பிஞ்சரபின், வெளிச்சுவாச
,, ,, internal - உட்சுவாச
,, sacral - பீடிகை
,, saphenous - பிரகட
,, sciatic - ஆசன
,, special - புல
,, sentient - உணர்
,, sixth - ஆருஞ்சொட்டு
,, spermatic - பீச
,, spheno-palatine - சதுசதாலு
,, spinal - கசேரு
,, ,, accessory - உபரோதரி
,, splanchnic - ஆந்திர
,, splenic - பிளிகை
,, sternal - நெஞ்சு
,, structure - வியூகனம்
,, sylo-hyoid of facial - தனுலேகி
,, sub-clavian - செத்துருக்கீழ்
,, sub-occipital- பிடர்க்கீழ்
,, sub-scapular- வாகுமுன்
,, superficialis colli - வெளிக்கிரீவ
,, superior cardiac - மேவிரிக
,, ,, maxillary - மேற்றுடை
,, supra-clavicular - செத்துருமேல்
,, supra-orbital - குவளைமேல்
,, supra-scapular - வாகுமேல்
,, supra-trochlear - கபிமேல்
,, sympathetic - சகவேத

Nerve temporal - கோசா
,, temporo-facial - கோசாமுக
,, termination of முடியும்வகை
,, third or motor oculi - கண்ணுருட்டி
,, thoracic anterior - பிஞ்சரமுன்
,, ,, posterior - பிஞ்சரபின்
,, thyro-hyoid - தனுவீதனி
,, tibial - கனக
,, of tongue - நா
,, tonsillitic - லகுன
,, trifacial - மும்முகி
,, trochlear கபி
,, tubular fibres of - குழவிழைகள்
,, tympanic - ஆனக
,, ulnar - இரத்தினி
,, uterine - சராயு
,, vaginal - யோனி
,, vagus - உரோதரி
,, vestibular வாரி
,, vidian - விதிய

Nervous substance - நரம்புப்பதார்த்தம்
,, system - நரம்புமண்டலம்
,, anatomy of - பொதுவிபரம்

Neurilemma - நரம்புறை
Nipple - முலைக்காம்பு, சுசுகம், சூசுகம்
Nodule or nodulus of cerebellum - கபூகம்
,, Arantii - அரந்திதிரணம்
Nose - மூக்கு, நாசி, நாசிகை
,, ala of - நாசிச்சிறை
,, bridge of - நாசித்திடல்
Notch - அண், அடனி, அறவு, குல்லியை
,, cotyloid - கம்சவண்
,, ethmoidal - பாடீரவண்

Notch inter-condyloid - முளி யிடையண்
,, nasal - நாசியண்
,, pterygoid - பாதவ
,, sacro-sciatic- பீடிகாசன
,, sigmoid - பிறை
,, spheno-palatine - சதுக தாலு
,, supra-orbital - குவளை மேல்
,, supra-scapular - வாகு மேல்
Nucleolus - விலசகம், நுக்கி லோலசு
Nucleus - விலசம், நுக்கிலசு
Nummular layer of retina - டங்கவருக்கு, நமுலப்படை
Nutrition - போஷணை, போ ஷணம்
Nympha - சிற்றிதழ்; நிம்வி

Oblique - சாய், நத
Occiput - பிடரி, பிடர், காடம்
Oesophagus - இரைக்குழல், நுங்கி, அன்னவாகி, இசா வகு
Oid - வ, வம், நிபம், மயம் Eng.—டு
Olfactory bulb- மோப்புக்குண் டம்
,, Nerve - மோப்புநரம்பு
Olivary body - காடினம்
Omentum - அவளிகை
,, gastro-colis - குக்கிப்புரீ தாவளிகை
,, gastro-hepatic - குக்கிக் காளகாவளிகை
,, gastro-splenic - குக்கிப் பிளகாவளிகை
,, great - பேரவளிகை
,, lesser - சிற்றவளிகை
,, sac of - அறை
Optic commosure - பார்வை யுகம்
Optic thalamus - பார்வைத் தளம்
,, tract - பார்வைக்கச்சம்
Ora serrata - கருக்கோரம்
Orbit - கட்குழி, குவளை, செபீ ரம்
Organ-இந்திரம், உறுப்பு, கருவி
,, of circulation - இரத்த வுறுப்பு
,, of digestion - சீரண வுறுப்பு
,, of generation - சனன வுறுப்பு
,, of respiration - சுவாச வுறுப்பு
,, of sense - பொறிகள்
,, urinary - சலவுறுப்புக்கள்
,, of voice - குரலுறுப்புக் கள்
Orifice - துளை, துவாரம், வா சல், வாயில்
,, oesophageal of stomach - பிராபகி, புகுவாசல்
,, pyloric - வர்ச்சனி
Origin - எழுவாய், உற்சமம்
Os, as bone - எலும்பு, என்பு, ஏணம், அஸ்தி
,, as mouth - வாய், முகம், லபனம்
Os uteri - கருப்பைவாய், சராயு முகம்
Osseo-aponeurotic - அஸ்தி வலச்ச
Osseous zone - என்புமேகலை
Ossification - என்பா குகை, அஸ்தியாகரணம்
Osteo-dentine-அஸ்தி பல்லே ணம்
Osteology - என்பியல், அஸ்தி வதம
Ostium - வாசல், வாயில்
Otolith - கோபலம்
Ovary - சினைப்பை, நாதகம் ஒவரி

Ovicapsule - சினையுறை
Oviduct - சினைப்பாதை
Ovisac - பரிச்சினை
Ovula of Naboth-நாபதர்சினை
Ovum - சினை, முட்டை, அண்டம், ஓவம்

Pacchionion body - பகினிய வசகம்
Palate - அண்ணம், தாலு
,, hard - வன்
,, soft - மென்
Palm - அகங்கை, அங்கை, உள்ளங்கை, சபேடம்
Palpebra - இமை, நிமை, புடம்
Pancreas - கணையம், பன்கிரசு
Papilla - கடு
,, maxima - பருடு
,, media - நடுத்தர
,, minima - சிறுக்கடு
Paries - சுவர், பித்தி
Parenchyma - பரகம், பரென்கிமம்
Parotid gland - செவி முற்கோளம், சோததிரானு கோளம், பரோட்டி
Pectiniform septum - கங்கவமத்தி
Peduncle - பாசம், காம்பு
,, of cerebellum - கோர்த்தக
,, of cerebrum - கோர்த்த
,, of carpus callosum - மகாயுக காம்புகள்
Pelvis - கூபகம், பெல்விசு
,, of kidney - பிருக்கமடை
Penis - சிசினம், பீனிசு
Pericardium - பரிரிகம், பெறிகாடியம்
Perichondrium - பரிமுருக்து பரிகாடிலாகு
Periphery - பரிதி, சுற்று
Perilymph - பரிநீரம்
Perinaeum - விடபம்
Periosteum - பரியஸ்தியம்
Peritoneum - பரியாந்திரம், பெறிதனியம்
Pes accessorius - உபசோதம்
,, hypocampi - சோதம்
Phalanx - விரல், அங்குலி
Pharynx - தொண்டை, நிசரணம், வாறிங்கு
Phlebolite - நாளசிலே, நாளக்கல், விலெபுலீற்று
Pia mater - கஞ்சுகி
,, of testis - பரிபீசம்
Pigment - வருணம், ரங்கம், பிக்மென்
Pillar - சிலே, யூபம்
Pineal gland - பாலுகம்
Pinna of ear - சாதுமடல்
Pituitary body - சுவற்கம், சுவரி
Planta - அகங்கால், அங்கால், உள்ளங்கால், தலம்
Pleura - பரிப்புபசம், பிளுறம்
Plexus - பின்னல், சாலம்
Plexus of nerves - நரம்புச்சாலம்
,, aortic - கண்டரை
,, brachial - உற்காய
,, cardiac deep - இரிகவாழிய
,, great - இரிகபெரு
,, superficial - இரிகவெளி
,, carotid - கிரீவ
,, cavernous - குகாசாலம்.
,, cerebral - கோர்த்த
,, cervical - கழுத்து
,, ,, posterior - கழுத்துப்பின்
,, coeliac - உதர
,, colic - புரீத
,, coronary - வேஷ்ட, வேட்ட
,, cystic - மாயுக
,, diaphragmatic-விதான
,, epigastric - குக்ஷிப்பின்

Plexus facial - முக
,, gastric - குக்ஷி
,, gastro-duodenal - குக்ஷிப்பசத
,, gastro-epiploic - குக்ஷிய வனிகை
,, hemorrhoidal - விரேகி
,, hepatic - ஈரல்
,, hypogastric - கீழுதர
,, ileo-colic - இலியபுரீத
,, lumbar - இடுப்பு
,, meningeal - பாலனி
,, mesenteric - மதியாந்திர
,, oesophageal - இரைக்குழற்
,, ophthalmic - நயன
,, ovarian - சினைப்பை
,, pancreatic - கணைய
,, pancreatico-duodenal- கணையபசத
,, pelvic - கூபக
,, pharyngeal - நிகரண
,, phrenic - விதான
,, prostatic - புரஸ்த
,, pulmonary - புப்புச
,, pyloric - வர்ச்சனி
,, renal - பிருக்க
,, sacral - பீடிகை
,, sigmoid - வகர
,, solar - குக்ஷிபின்
,, spermatic - பீச
,, splenic - பினிகை
,, suprarenal - பிருக்கோபரி
,, tympanic - ஆனக
,, vaginal - யோனி
,, vesical - கிலோம
,, of veins - நாளசாலம்
,, choroid - சூணம்
,, hemorrhoidal - விரேகி
,, ovarian - நாதக
,, prostatic - புரஸ்த
,, spermatic - பீச

Plexus uterine - கருப்பை
,, vaginal - யோனி
,, vesical - கிலோம
Plica semilunaris - பிறைத்திரை
Pomum Adami - முடிச்சு
Pons hepatis - ஈரல்யுசம்
,, Tarini - தரின் தனம்
,, Varolii - வரோலி தன்னம்
Popliteal space - மந்திரவெளி சானுசம்
Posterior - பின், அபரம்
Prepuce - முன்தோல். சிகுதி
Process - விசம், முளை, முனை, பிரசரம்
,, acromian - கீசக
,, alveolar - காவட
,, angular - குவளை
,, auditory - செவித் தொளைப்புருவம்
,, basilar - மகாவிசம்
,, ciliary - சக்கரவவரைகள்
,, clinoid - சுவல்
,, cochleariform - தருவி
,, condyloid of lower jaw - முளி
,, coracoid - கணை
,, coronoid of lower jaw - கோடுவ
,, of ulna - தசன
,, ethmoidal - பாடீர
,, of frontal - நெற்றி
,, hamular - வெளிச
,, jugular - கந்தர
,, lachryma - அசுரு
,, malar - சவுள்
,, mastoid - சூசுக
,, maxillary - தாடை
,, mental - சம்ப
,, nasal - நாசி
,, odontoid - தசன
,, olecranon - கூபர
,, olivary - சுவற்புடை

Process orbital - குவளை
,, palatine - தாலு
,, pterygoid - பாதவ
,, sphenoidal of palate - சதுக
,, spinous of tibia - கனக முனை
,, ,, of ilium - முனை
,, ,, of sphenoid - பளை
,, styloid - லேகினி
,, superior vermiform of-cerebellum - மேற்கிடவம்
,, unciform - கொம்பு
,, vaginal - உறை
,, zygomatic - யுகம்
Profundus - ஆழிய, உள், கம்பீர
Promontory of tympanum - புடை
Prostatic gland - புரஸ்தகோளம், புரஸ்தி
Protuberance - புடைப்பு, புடை
Public arch - மேகனத்தவர்
Pudendum - பேரிதழ்புடென்று
Pulmonary - புப்புச
Puncta vasculosa - தசிரவொற்று
Pupil of eye - கயினை
Pylorus - வர்ச்சனி, பைலோறு
Pyramid - சிகரம்
,, of cerebellum - குவடு
,, of Ferrein - வெறைன்
,, of Malpighi - மல்பீச்சி

Receptaculum chyli - பசக்கூடு
Rectum - விரேகி, கடைக்குடல்
Recurrent - மீளும், புனர்சம்
Region - ஆதாரம்
,, epigastric - மேல் வயிறு
Region hypochondriac - பிசண்டம்
,, hypogastric - கீழ் வயிறு
,, inguinal - வஞ்சணம்
,, lumbar - சன்னை
,, umbilical - நாபியயல்
Relation - அயல், சகவாசம்
Reptile - ரெப்தில், சூசம்
Respiration - மூச்சு, சுவாசம்
,, organs of - சுவாச உறுப்புகள்
Restiform body - வராடம்
Rete mucosum - வருணகம்
,, testis - பீசசாலம்
Retina - தரிசி, ரெதினம்
Ribs - பழு, விலா, பர்சுவகம், பர்சுவம்

Ridge - புருவம்
,, internal occipital - பிடருன்
,, mylo-hyoidean - தனுகுஞ்சசி
,, pterygoid - பாதவ
,, superciliary - கட்
,, temporal - கோரா
Rima glottidis - கிராதம், குரலி
Ring - வளையம், வலையம்
,, abdominal - உதர
,, fibrous of heart - நசை வளையம்

Root - வேர், மூலம்
Rostrum of corpus callosum - துண்டி
,, of sphenoid bone - ஏராப்புருவம்
Rotation - உழல்வு

Sacculus - பை
,, laryngis - கிருகப்பை
,, of vestibule - குருதி
Scala tympani - ஆனகசோபானம்

Scala S. vestibuli - வாரிச் சோபானம்
Schindylesis - தரிகசந்தி
Sclerotic - கடினை, ஸ்கிளறட்டி
Scope - அட்சி, ஸ்கோப்பு
Scrotum - பீசப்பை, அண்டகம், ஸ்கிரோட்டம்
Sella turcoca - சுவற்பள்ளம், சுவல்
Semen - விந்து, தாது
Semicircular canals - திரிதடம்
,, membranes - சவ்வுத்தடம்
Semilunar - பிறை
,, valve - பிறைக்கபாடம்
Seminal granules - விந்துக்கிறனுல்
Senses - பொறிகள்
Sensory - உணர்
Septum - மத்தி, இடைச்சுவர்
,, lucidum - ஒளிமத்தி
,, pectiniforme - சங்கவ
Serous coat - வசாகவசம்
Serum - வசாநீர், சேரம்
Serration - சுருக்கு, கிண்ணி, பல்
Shaft - காண்டம், தம்பம்
Sigmoid flexure of colon - வகரம்
,, mesocolon - மதிலகரம்
Sinus - அறை, அவடி
,, venous - தாரணி
,, aortici - கண்டரை
,, cavernous - குகா
,, circular - விருத்த
,, circularis iridis - வருணிச்சுற்று
,, coronary - வேஷ்ட
,, frontal - அளிகாவடி
,, lateral - பக்க
,, longitudinal - நெடும்
,, maxillary - அனுகுகை
,, occipital - பிடர்
,, petrosal - கிராவ
Sinus straight - நேர்
,, transverse - குறுக்கு
Skeleton - கங்காளம், ஸ்கெலிதன்
Skin - தோல், சருமம், ஸ்கின்
Skull - மண்டை
,, base of - அடி
,, cerebral surface of - உட்பக்கம்
,, external surface - வெளிப்பக்கம்
,, lateral region of - மண்டைக்கன்னம்
,, tables of - தகடு
,, vertex of - உச்சந்தலை
Socia parotidis - சோத்திரானுசகி
Sole - தலம், உள்ளங்கால், அகங்கால், அக்கால்
Space - இடம், வெளி, தலம்
,, perforated anterior - சல்லடைத்தளம்
,, posterior - தரின் தளம்
,, sub-arachnoid - சாலவப்புரை
Spermatic cord - பீசக்கொடி, பீசலதை
Spermatozoon - விந்துசம், ஸ்பேமதுசோன்
Sphincter - சுருக்கி, சங்குசி
Spinal cord - முள்ளந் தண்டுக்கொடி, கசேருக் கொடி, கசேருலதை
Spine - புருவம், முள்
,, ethmoidal - பாடீரவிகம்
,, ischium - ஆசனமுள்
,, nasal - நாசிமுள்
,, pharyngeal - கிகரணமுள்
,, of pubes - மேகனமுள்
,, of scapula - வாகுபுருவம்
Spleen - பிளிகை
,, hilum of - கவிகை

டினதற்காக அவனுக்கு ஊரைச் சுற்றி சவுக்கடி விழுந்திருக்கும்'' ஆனாலும், சத்திரக்காரி அப்படியே வற்புறுத்திப் பேசினாள். சத்திரக்காரனும் எழுந்து எங்கள் அறையை விட்டு, "எப்படியாவது அவரைத் திருப்தி செய்யவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு போனார். நானும் அவனை நோக்கி, "ஐயா, அப்படிப்பட்ட பாதுக்கஞ் சகியாத பரமாத்மாவாகிய புதுப்பெரிய மனிதர் நேசத்தை நானும் விரும்புகிறேன். என்னை அவர்க்கு அறிமுகம் செய்வியும்'' என்றேன். அப்படியே அவரும் 'ஓம்' என்றுடன் பட்டு முப்பதுவயதுள்ள ஒரு பெரிய மனிதர்க்கு என்னைக் காட்டினார். அவர் உடை ஒரு காலத்தில் சரிகை உடையாயிருந்ததென்று தெரிந்தது. அவருடைய தோற்றம் நன்றாய் அமைந்திருந்தது. ஆழ்ந்த எண்ணங்களில் வீழ்ந்திருந்த முகக்குறி தோன்றிற்று. அவர் பேச்சு சுருக்கமாயும் பசையற்றதாயும் ஒருவாறு இருந்தமையால் *பொதுமலரிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதம் அவர்க்குத் தெரியாததுபோலவும் அல்லது தெரிந்தும் அதை அவமதித்ததுபோலவும் தோன்றிற்று. சத்திரக்காரர், அவர் அறையை விட்டு அப்பால் அகன்றவுடனே புது மனிதராகிய அவரிடத்தில் எனக்கிருந்த அக்கறையைப் பற்றி நான் அறிவிக்காமல் இருக்க முடியவில்லை. அப்படிப்பட்ட விநோத நிலைமையிலிருந்த பெரிய மனிதராகிய அவரை நான் வியந்து கண்ட விஷயத்தை அறிவித்து, என் பையைத் திறந்து அப்போதவர்க்கு வேண்டியிருந்த பணத்தைக் கொடுத்தேன். உடனே அதை அவர் கைநீட்டி வாங்கினபடியே, "இதை நான் என் முழு மனதோடு பெற்றுக்கொள்ளுகிறேன், ஐயா'' என்று பேசினபடியே, பணத்தை எடுத்துக்கொண்டார். முன்பின் பாராமல் என் கையிலிருந்த பணத்தையெல்லாம் நான் செலவழித்து விட்டதும் ஒரு விஷயத்திற்கு நல்லதுதான். "தங்களைப்போன்ற தயாளபுருஷர்கள் இருக்கிறார்கள் என்று நான் அறிந்துகொள்வதற்கு அதுவே

* உறவும் பகையு மற்ற அன்னியர்,

காரணமாயிருக்கிறது. 'கேட்டினுமுண்டோ ருறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்' என்பது வேதவாக்கியம். இன்னும் நான் என்ன சொல்லப்போகிறேன்; உங்கள் ஊர், பேர் கேட்டுத் தெரிந்துகொண்டால், நீங்கள் இத்தனை அன்பாய்ச் செய்த உதவிக்கு இன்பாய்ப் பதிலுதவி இயற்ற என்றால் முடியாது. ஆனாலும் நான், தொகையையாவது கூடிய சீக்கிரம் கொண்டுவந்து செலுத்திவிடலாம்" என்றார் பர்ச்சல். இந்த விஷயத்தில் அவர்க்குத் திருப்தி உண்டாகும்படி என் ஊர் பேர் முதலிய விவரங்களையும், சமீபத்தில் எனக்கு நேரிட்ட பொருள் நஷ்டம் பரதேசகமனம் முதலிய விஷயங்களையும் விளங்க வுரைத்தேன். அதனால் அவர் நான் சொல்லும் இடம் இன்னதென்றறிந்துகொண்டார். "இதுவும் நான் எதிர்பாராத நல்ல அதிர்ஷ்டத்தால் ஏற்பட்டிருக்கிறது. நானும் நீங்கள் போகிற பக்கமே தான் போகப் போகிறேன். இந்த இரண்டு நாளாய் வெள்ளத்திற்கஞ்சி இங்குத் தங்கியிருந்தேன். வெள்ளம் நாளைக்குள்ளாக வற்றிவிடும்; கடந்து செல்ல வசதியாயிருக்கும்" என்று முடித்தார். அவர் என்னோடு உறைவதால் எனக்குண்டாகிற சந்தோஷத்தை அறிவித்தது மல்லாமல் என் மனைவி மக்களும் என்னோடு சேர்ந்து வேண்டிக்கொண்டதன்மேல் இரவில் அவர் எங்களோடிருந்து விருந்து உண்பதற்குச் சம்மதிக்கலானார். புதியவராகிய அவருடைய பேச்சு இரம்மியமாயும் அறிவு புகட்டுவதாயும் இருந்தது பற்றி, இன்னும் பேசவேண்டும் என்னும் விருப்பத்தினையும் தூண்டிற்று. ஆனால் இரவு நெடுநேரமாய் விட்டது. மறுநாள் களைப்படையாமலிருக்க, அன்று சிறிது உணவு அருந்தி சயனிக்கச் சென்றோம்.

மறுநாள் எல்லோரும் ஒன்று கூடிப் புறப்பட்டோம். என் குடும்பத்தார் குதிரை ஏறி வந்தனர். எங்கள் புது நண்பராகிய பர்ச்சல் 'துரை, சாலை ஓரத்திலிருந்த காலடிப்பாதை வழியில் நடந்து வந்தார். வந்தவர் புன்சிரிப்போடு, "ஐயா! உங்கள் குதிரை மெத்த நிதான நடையுள்ளது. ஆனாலும், முந்தி நான் விரைந்து நடந்து, உங்களைப்பிந்திவிடுவது பெருந்தன்மைக்கழகல்ல," என்றார். வெள்ளம் இன்னும் நன்றாய்

வற்றவில்லை. ஆகையால் ஒருவனை வழிகாட்டியாக் வைத்துக் கொள்ள நேரிட்டது. அவன் முந்திக் குதிரையேறிப் போனான். பர்ச்சல் துரையும் நானும் பின்னணியிற் பேசிக் கொண்டே போனோம். எங்கள் பேச்சு வேதாந்தமாயிருந்தது. மனதிற்கு உற்சாகம் ஊட்டிற்று, வழிநடை இளைப்புத் தோன்றவேயில்லை. நான் பேசும் வேதாந்த வாதத்தை அவர் நன்றாய் உணர்ந்து பேசினார் கடன் வாங்கினவராயிருந்தும் எனக்கு அவர் உபகாரிபோல் பிடிவாதமாய்த் தம்மை வியந்து காத்துப் பேசினார். எனக்கது மெத்த அதிசயமாயிருந்தது. நடந்துக்கொண்டே போனபோது, இடைவழியிலிருந்த பற்பல பிரபுக்களின் சொந்த இடங்களாகிய மாளிகைகளையும் நிலங்களையும் சுட்டிக் காட்டிச் சொல்லிக்கொண்டே வந்தார். தூரத்திலிருந்த ஒரு உன்னதமான வீட்டைச் சுட்டிக்காட்டி, "அதோ தெரிகிறதே, அது தார்ன்ஹில் என்னும் வாலிபருடையது. அவர் பெரிய மனிதர். மெத்தப் பணக்காரர். தம் சிறிய தந்தையரின் நன் கொடையை முற்றும் எதிர் பார்த்துக் காலக்ஷேபம் செய்யவேண்டியவராயிருக்கிறார். சர் வில்லியம் தார்ன்ஹில் தனக்குக் கொஞ்சம் வைத்துக் கொண்டு திருப்தியடைந்து பட்டணத்தில் வசிக்கிறார். மற்றவைகளை யெல்லாம் அவர் அண்ணன் மகன் அனுபவிக்க விட்டிருக்கிறார்," என்று சொன்னார். "என்ன! இப்போது நாம் வசிக்கப்புகும் குடிமைக்குரிய வாலிபர், தருமத்திற்கும், கொடைக்கும், நன்னடைக்கும் உலகெங்கும் பேர் போன உத்தமருடைய அண்ணன் பிள்ளையா? நான் சர் வில்லியம் என்பாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் அன்பினுக்குப் பேர் போனவர்தாம். ஆனால் சபலசித்தமுள்ளவர். பரோபகாரஞ் செய்வதில் முதன்மை பெற்றவர்" என்றேன். "ஆமாம், ஒருவேளை அப்படிச்சற்று அதிக்கிரமித்தவராயிருக்கலாம்; சிறுவயதில் அவர் மிதமிஞ்சின உபகாரியாயிருந்தார். அப்போது அவருடைய உணர்ச்சி பலமுற்றிருந்தது. அது முழுதும் சன்மார்க்க விஷயமாகவே இருந்தமையால், அவரை நம்ப முடியாத இறுதிக்குக் கொண்டு வந்துவிட்டது. சிறுவயதில் அவர் போர்வீரனுக்குரிய

குணமுற்றிருப்பதிலும் நன்ருய் வாசித்தவனுடைய நலம் பெற்றிருப்பதிலும் நாட்டம் வைத்தார். ஆகையால் விரைவில் அவர் சேனையில் நற்பெயர் பெற்ருர்; வாசித்தவர்களுக்குள் கீர்த்தியுற்ருர். பதவியை விரும்பிப் பேராசைப்பட்டோர் *இச்சகம் பேசுவார் தங்களைத் தொடர்ந்து வரவேண்டுவர்

அவரைப்பலரும் சூழ்ந்து கூடினர். அவர்களனைவரும் தத்தம் குணப்பான்மை ஒன்றையே தோற்றுவித்தனர். ஆகையால் உலக வாஞ்சையால், பாத்திராபிமானத்தில் பற்றற்றவரானுர். அவர் மாந்தர் அனைவரையும் ஒரே தன்மையாய் நேசித்தார். ஏனென்ருல் அவருக்கு அதிருஷ்ட வசத்தால் அயோக்கியர் இன்னுரென்று அறிந்து கொள்ளத்தடைபட்டது. அற்பம் தொட்டாலும் இசிப்பெடுக்கும் அவ்வளவு தீக்ஷணிய உணர்ச்சிக்குத் தேகமெல்லாம் ஆஸ்பதமாகும் இசைக்கேட்டு நோய் ஒன்றுண்டென வைத்தியர்கள் சொல்லுகிருர்கள். இவ்வாறு சிலர் தேகத்திற்பட்டது, இச்சீமான் மனத்திற்பட்டது, விளக்கு மிடத்து பிறர்காவிற்பட்டது, இவர் கண்ணிற் பட்டாற் போலாயிற்று. உள்ளபடியோ அல்லது பொய்யாகவோ யார்க்காவது கொஞ்சந் துயரம் வந்தால், அது மனத்திற் புகுந்து அதி தீவிரமாய் வாட்டிற்று; உடனே இவருடைய ஆன்மா அதை உணர்ந்துவாடி வதங்கி, அது தனக்கே வந்ததுபோலத் தவித்துத் தத்தளிக்கும். இப்படி இவர் பரதுக்கந் தெரியாத பரமாத்மாவாய், அதற்குப் பரிகாரந் தேடக்காத்திருந்ததனுல் இவரை நாடிவந்த ஏழைகளுக்கு எண்ணிக்கைஇல்லை. 'குந்தியழித்தால் குன்றுங் குன்றும்' என்றபடி அத்தகைய உதாரகுணம் இவர்செல்வத்தைச் சீரழிக்கத் தொடங்கிற்று. ஆனுல் இவர் தருமசிந்தைமட்டுங் குன்றவில்லை. செல்வங்குன்றக் குன்ற அவருடைய தருமோத்தம குணம் வளர்ந்துகொண்டே வந்தது. ஏழையாக வாக அவருக்கு எச்சரிக்கை குறைந்தது. அவர் ஓர் அறிவாளிபோற் பேசினுர். ஆனுலும் அவருடைய செய்கைகளெல்லாம் மூடத்தனமாயிருந்தன. இருந்தாலும், இப்படி எல்லாரும்

* இச்சகம்-முகஸ்துதி.

அவரைச் சூழவிருந்து பிடுங்கித்தின்ன நெருக்கினபடியால், அவரால் ஒன்றும் முடியவில்லை. ஒவ்வொரு வேண்டுகோளையும் பூர்த்திசெய்ய அவரால் ஆகவில்லை. அவரிடத்தில் வந்தவர்க்கெல்லாம் பணத்திற்கு மாறாக வாக்குக்கொடுத்தார். நாளை நாளை என்று சொல்லத் தொடங்கினார். 'வாதக்கோன் நாளையென்றான்—வையக்கோன் பின்னையென்றான்' என்றபடி ஆயிற்று. இதைவிட அவரால் ஒன்றும் ஆகவில்லை. இது தான் அவராற் கொடுக்கமுடிந்தது. இல்லையென்று மறுத்துரைக்க அவர்க்கு மனோதிடம் இல்லை. இல்லையென்றால் யாரும் மனம் வருந்துவர் என்பது அவருடைய எண்ணம். ஆகையால் இப்படி எதிரி வருந்துவதைப் பார்க்க அவர்க்கு மனம் வரவில்லை. இதனால் இன்னும் பலர் அவரைச் சூழ்ந்து அபேக்ஷித்தார்கள். தம்மால் ஒன்றும் ஆகாது; அவர்கள் ஏமாறுவார்கள் என்பது அவர்க்கு நன்றாய்த்தெரியும். தெரிந்தும் அவர்கள் துன்பந் துடைக்கவேண்டுமென்பது அவருடைய எண்ணம். இப்படிச் சிலநாள் அவர்கள் இவரை விடாமல் நத்திக்கொண்டிருந்து பார்த்தார்கள். அவரால் ஒன்றும் ஆகாததுகண்டு அவரை வெறுத்துச் சபித்துவிட்டுப் போனார்கள். அவரை எவ்வளவுக் கெவ்வளவு பிறர் வெறுக்கத் தலைப்பட்டார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர் தம்மைத்தாமே வெறுத்துக்கொண்டார். அவருடைய மனம் அவர்களுடைய இச்சகத்தை ஆதரவாகப்பற்றியிருந்தது; இப்போதது இல்லாமற்போகவே தத்தளித்தது; அவருடைய சித்தங்கலங்கிற்று. அதிற் சமாதானமும் மகிழ்ச்சியுந் தலையெடாதொழிந்தன. சித்த சமாதானத்தை வேறு வழியிற்பெறப் பழகாததனால் அவர் பித்தம் வளர்ந்தவர்போல் தளர்ந்தார். இப்போது உலகம் அவரைப்பற்றி வேறுகூறத்தொடங்கிற்று. இச்சகம் பேசின நண்பர் அனைவரும் சாதாரணமாய் அவரை அநுமானிக்கலானார்கள். அவ்வநுமானமும் வரவர புத்திசொல்லும் பான்மையில் முடிந்தது. அதை அவர் ஒத்துக்கொள்ளாவிட்டால் அப்புத்திமதியும் வசைமொழிசொரிவதாக மாறிற்று. இப்போதுதான் அவர்க்குக் கண் திறந்தது. உள்ளது உள்ளபடி உணர்ந்தார். உபகாரார்த்தமாய்த் தம்மைச் சூழ்ந்திரு

ந்த நண்பரனைவரும் உபயோக மற்றவர்கள் என்று கண்டு கொண்டார். அவர்களைச் சன்மானிக்கத்தகாத பதர்களென்றே மதித்தார். இரும்பை இரும்பால் அறுப்பதுபோல நம துள்ளத்தை உதவியே பிறர் உள்ளத்தைப் பெறவேண்டுமென்று உணர்ந்துகொண்டார். இப்போதுதான் எனக்கு ஞாபகம் வந்தது! நான்-நான் என்ன சொல்லப்போகிறேனே அதை மறக்கிறேன். சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேன்; ஐயா! அவர் தம்மைத்தாமே மதிக்கத் தீர்மானித்தார். தாம் இழந்த செல்வத்தை மறுபடியும் தேடத்தொடங்கினர். தேடாதழிக்கின் பாடாமுடியும் என்பதுணராமல் நடந்து கொண்டதைக்கண்டு கொண்டார். இதற்காக அவர் தமது விபரீத உணர்ச்சியின் படி கால் நடையாகவே ஐரோப்பா கண்டம் அடங்கலும் பிரயாணஞ் செய்தார்; இப்போதவர் இன்னும் வயது முப்பதும் முடியாத வாலிபர் ஆனாலும், அவருடைய நிலைமை முன்னொரு பொழுதும் இருந்திராதசெல்வவளம் மலிந்ததாய் இருக்கிறது. இப்போதவர் செய்யும் உபகாரம் மிதமாயும் விகிதமாயும் முன்செய்ததை விடச் சிறந்திருக்கிறது. ஆனாலும் இன்னும் அவர் தமது சேஷ்டைத்தன்மையை விடாமல், விபரீதமாய் ஒழுகுவதில் மிகவும் இன்பமடைகிறார்," என்று பர்ச்சல் துரையும் விவரித்துரைத்தார்.

இப்படி பர்ச்சல் துரை சொல்லிக்கொண்டுவந்ததில் என் கவனம் மெத்த மூழ்கி யிருந்ததனால், நான் அவரைப் பார்த்தபடியே நடந்தேனன்றி எதிர் நோக்கிப்பார்த்தேன் இல்லை. கடைசியாக எங்களுக் கெதிரில் ஒரு கூச்சல் கேட்டது. எங்களை அது மருள வைத்தது. அக்கூச்சல் முகமாகத் திரும்பிப் பார்த்தபோது, என் இளையமகள் விரைந்தோடும் ஆற்று நீரில் வீழ்ந்து கிடக்கக் கண்டேன்; குதிரை மேலிருந்து விழுந்த வீழ்ச்சியினால் பயந்து, நீரோட்டத்தோடு போராடிக் கொண்டிருந்தாள். இரண்டுமுறை மூழ்கிவிட்டாள். அவளுக்கு உதவி புரிய வேண்டியகாலத்தில் என் இதர சிந்தனைகளை ஒழித்துவிட என்னால் இயலவில்லை.

அப்போது நான்கேள்விபட்டவைகளால் என் ஸ்மரணையானது துராகரிக்கப்பட்டு அவளைத் தப்புவிக்கு முயற்சி

செய்யத் தோற்றவில்லை. என்னோடிருந்த பர்ச்சல் துரை அவளுக்கு வந்த ஆபத்தை யறிந்து உடனே ஓடித் தண்ணீரில் மூழ்கிக் கஷ்டப்பட்டுச் சேமமாய் அவளை அக்கரை கொண்டுபோய்ச் சேர்த்தார். அப்படி அவர் துணிந்து சென்றிராவிட்டால், நிச்சயமாய் அவள் செத்தே போயிருப்பாள். இன்னும் கொஞ்சம் நீர் ஓழுக்கின் மேற்புறம் சென்று வெள்ளத்தைக் கடந்து, மற்றவர்கள் எல்லாம் சேமமாய்க் கரை யேறினார்கள். எல்லாரும் என் இளைய மகளோடு சேர்ந்து பர்ச்சல் துரைக்கு நன்றி செலுத்தினோம். என் மகள் மட்டும் தனிமையில், தன்னைக் காத்தவரை வாயால் வாழ்த்த முடியாமல், கட்பார்வையால் நன்றி செலுத்தி அவர் மேலேயே சாய்ந்துகொண்டு, இன்னும் அவருடைய உதவியை நாடி இருந்தவள்போல் தோன்றினாள். என் மனைவியும் எங்கள் வீட்டில் ஒருநாள் அவரை வரவேற்று விருந்திட்டு, அதனால் அவர் செய்த உதவிக்குதவி செய்யக் கோரினாள். இப்படி நாங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து அடுத்த சத்திரத்தில் இளைப்பாறி உண்டு முடிந்த பிறகு, பர்ச்சல் வேறோரிடத்துக்குப் போகவேண்டியவரா யிருந்தபடியால் எங்களிடத்தில் விடைபெற்றுக் கொண்டார்; நாங்கள் மாத்திரம் பயணம் போனோம். அப்போது என்மனைவி, அவரைக் குறித்து என்னிடத்தில் பேசத்தொடங்கினாள். அவர் விஷயத்தில் தனக்கு மெத்தச் சந்தோஷ மிருப்பதாயும் அவர் மட்டும் ஐசுவரியமும் அந்தஸ்தும் உடையவராய் இருந்து தங்கள் குடும்பத்தில் சம்பந்தம் செய்யக் கூடியவரானால் அவரைத் தவிர வேறொருவரையும் தான் தேடாமல் அதி விரைவாய் அவரையே மணமகனாகக் குறிக்கப்படும் என்று முடித்தாள். இப்படி அவள் பெருமிதமாய்ப் பேசக் கேட்பதால் நான் புன்னகை புரியாமல் இருக்க முடியவில்லை. எங்கள் மகிழ்ச்சியை வளர்க்கக்கூடிய இப்படிப்பட்ட குற்றமற்ற பேதைமை வார்த்தைகளால் எப்போதும் நான் வெறுப்பு அடைந்ததே யில்லை.

எளிய இன்பம்.

அதிகாரம் 4.

மெத்தத் தாழ்ந்த செல்வமும் சுத்த ஆழ்ந்த இன்பத்தைக் கொடுக்கும் என்பதற்குப் பிரமாணம்- இன்பம் [1]நிலைமையைப் பொறுத்ததல்ல, [2]நியமத்தைப் பொறுத்தது.

நாங்கள் சென்று சேர்ந்த இடம், குடியானவர்கள் இருந்த ஒரு சிற்றிடத்திற்குச் சமீபமாயிருந்தது. இவர்கள் சில சோம்பேறிப்பண்ணைச் செல்வர்களைப் போலத் தமது நிலங்களை வாரத்துக்கு விட்டு விடாமல், தாமே பயிரிட்டார்கள். 'சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்' என்னும் பழமொழியை இவர்கள் நன்றாய் அறிந்தவர்கள்; ஓடும் பொன்னையும் ஒக்கவே நோக்குவார் என்றபடி ஓட்டையும் பொன்னையும் ஒருபடித் தாய்நோக்கும் பெரியோர்களைப்போல, செல்வவறுமைகளை வேறுபிரித்தறியத் தெரியாதவர்கள் இவர்களுக்கு அவ்விரண்டும் இன்னவெனத் தெரியாவாகையால் அவைகளுக்கு இவர்கள் புதியவர்கள்; தாமிருந்த ஊர்க்குள்ளேயே எல்லா வசதிகளையும் பெற்றிருந்தார்கள் ஆகையால், இவர்கள் இட்டதற்கு மேல் ஏறுசைப்பட்டு [3]வீண் சுகத்தை நாடிப் பட்டணங்களுக்குப்போவது கிடையாது. [4]நாகரிகர்களுக்கும் இவர்களுக்கும் மெத்தத்தூரம் ஆனாலும், கள்ளங்கவடற்ற [5]ஆதி ஆசாரத்தை இவர்கள் கைவிடவில்லை; இவர்களுக்கு எதிலும் மிதமாயிருப்பதே நல்லொழுக்கமென்று தெரியாது. ஆயினும் இவர்கள் எந்தப் பழக்கத்திலும் அளவாயிருந்

---

1. நிலைமை = (செல்வ நிலை).

2. நியமம் = உள்ளத்தின் இயற்கை, மனோநிலை, சிந்தையின் நினைவு.

3. வீண்சுகம் = வேண்டும் அளவுக்கு மிஞ்சி அதிகமான சுகம்,

4. பட்டணத்துப்போலி மரியாதைப் பிரியர்கள்,

5. பழய ஒழுக்கம், பூர்வமரியாதை,